**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 2 - 2022**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 2 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 18 ஆம் திகதிய 3625-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவு மற்றும் 3626-எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம், குடிநீர் மற்றும் வணிக நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். வடமத்திய மாகாண கால்வாய் நிர்மாணம் மற்றும் வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணங்கள் ஆகிய இரண்டு கூறுகளின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 38,177.67 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 33,129.39 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,048.28 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 திசெம்பர் 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூபுர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

நிகழ்ச்சித்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண பெரிய கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் கோந்துருவாவ முதல் நாமல்புற வரையிலான 27.7 கிமீ சுரங்கப்பாதை நீர் வழித்தடத்தை நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 15 இல் ரூபா 40,073 மில்லியன் மொத்த பெறுமதியில் வெளிநாட்டுக் கம்பனியொன்றுடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இச்செயற்திட்டம் 2020 – 2027 இற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பகுதி 2 இற்காக கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒப்பந்தத்தை வழங்குவதில் 2 ½ ஆண்டுகள் காலதாமதமானதால், ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யும் திகதி 2027 மார்ச் 10 வரை நீடிக்கப்பட்டது. | 2017 இல் பெறுகை செயன்முறை இறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் "உமாஓயா" செயற்திட்டத்தில் நீர் உட்புகுதல் மற்றும் சிக்கல்கள் காரணமாக, பங்குதாரர்களும் அரசாங்கமும் இந்த செயற்திட்டத்தை மதிப்பாய்வு செய்வதற்கு முடிவு செய்தனர், இதன் விளைவாக 2½ ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டது. | ADB உடன் கலந்துரையாடி மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2025 யூன் 7 வரை ஒப்பந்த கால எல்லையை விரைவுபடுத்துவதற்கு 2021 ஒக்தோபர் 7 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க, 2வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரம் 2022 ஒக்தோபரில் ரூபா 6,691 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் மேலதிக நிதியை உடனடியாகப் பெறுவதில் உள்ள சவால்கள் காரணமாக, 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய 23/0533/623/014 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தால் இது முடிவு செய்யப்பட்டது. சுரங்கப்பாதை துளையிடும் | எனினும், TBM-2 ஐ 2023 ஒக்தோபரில் தொடங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது, அதே நேரத்தில் ADB இடம் இருந்து நிதியுதவிக்காக அங்கீகாரம் பெறுகிறது. | இரண்டாவது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு சரியான திட்டத்தை தயார் செய்து, திட்டத்தின் பிரகாரம் இயந்திரம் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் 2024 மார்ச் வரை தற்காலிகமாக விளைவற்ற நிலையில் வைக்கப்படும். இதன் விளைவாக, இரண்டாவது துளையிடும் இயந்திரத்திற்காக ஏற்பட்ட செலவினம் இந்த காலப்பகுதியில் விளைவற்றதாகியிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியளவில் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரும், சுரங்கப்பாதையின் 50 மீற்றர் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாண முன்னேற்றம் 10 சதவீத குறைந்த மட்டத்தில் இருந்தது. | TBM-1 இயந்திரத்தை தயாரித்து, அதை வேலைத்தளத்திற்கு வழங்குவதற்காக நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் கிட்டத்தட்ட ஒரு வருடம் எடுத்தது.<br><br>இறக்குமதிக் கட்டுப்பாடுகளுடன் கூடிய வெடிமருந்துகள் கிடைக்காததால் TBM இயந்திரத்தை நிறுவுவதற்கு சுரங்கப்பாதையுடன் சேர்த்து அணுகல் தண்டு (access shaft) மற்றும் தேவையான நீளம் தாமதமாகியது.<br><br>2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, TBM-1 இயந்திரம் இதுவரை 1110 மீற்றர் நீளமான சுரங்கப்பாதையை அடைந்துள்ளது. | ஒரு புதிய கால எல்லையை நிர்ணயித்து, அக் கால எல்லைக்குள் பணியை பூர்த்தி செய்வதற்கு சீரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாண பெரிய கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 9,978 மில்லியன் பெறுமதியான மஹகிதுல நுழைவு சுரங்கப்பாதை, மஹகிதுல மற்றும் மஹகிருள நீர்த்தேக்கங்கள் மற்றும் ஊட்டி கால்வாய் மஹகிருள நீர்த்தேக்கங்கள் ஒரு வெளிநாட்டு கம்பனிக்கு 2024 இற்குள் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், முறையான பதவியணியினர் பற்றாக்குறை, நிர்மாண உபகரணங்கள் போதாமை மற்றும் மோசமான வேலைத் தள முகாமைத்துவம் காரணமாக 2 ஆண்டு காலப்பகுதியின் போது நிர்மாண முன்னேற்றம் 2.97 சதவீத குறைந்த மட்டத்தை நினைவூட்டியது, திருப்தியற்ற சூழ்நிலைக்கு பதிலளிக்கும் வகையில் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ஒப்பந்தம் 2023 மே 11 இல் நிறுத்தப்பட்டது. முற்பணக் கொடுப்பனவு முழுமையாக அறவிடப்பட்டிருந்தது. | (i) ADB வழிகாட்டலின் பிரகாரம் புதிய ஒப்பந்ததாரர் ஒருவரைத் தெரிவுசெய்தல்<br><br>(ii) ஒப்பந்ததாரர் கறுப்பு பட்டியலில் இடப்பட வேண்டும்<br><br>(iii) ரூபா 459.18 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 3.021 மில்லியன் தொகையான செயலாற்றல் உத்தரவாதங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே ரூபா 1,197 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தையும் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக ரூபா 355 மில்லியன் கொடுப்பனவையும் ஏற்கனவே செலுத்தியிருந்தது. | | |
| (இ) | பகுதி 03 தொடர்பாக, 09 திட்டமிடப்பட்ட ஒப்பந்தப் பொதிகளில் 6 ஒப்பந்தப் பொதிகளுக்கான ஒப்பந்ததாரர், பகுதி 2 இன் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 1.7 மில்லியன் கிரயத்தில் தெரிவுசெய்துள்ளார். எனினும், பகுதி 3 ஐ அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான கடன் நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருக்காததால், ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் பெறுகை நடவடிக்கைகளுக்காக பகுதி 2 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் விளைவற்றிருப்பதற்கு வழிவகுத்தது. | 2021-2022 இல் நாட்டில் நிலவிய பரிதாபமான சூழ்நிலைகள் காரணமாக இந் நிலைமை கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. பகுதி - 3 இன் கீழ் தேவையான நிதிகள் மற்றும் மேலதிக நிதிகள் நாங்கள் எதிர்பார்த்தவாறு பெறப்படவில்லை, அதே வேளை ADB மற்றும் ERD மற்றும் அரசாங்கம் ஒப்பந்தத்தை வழங்க வேண்டாம் என்று அறிவுறுத்தியதால் நிலைமை எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. எனவே, பெறுகை செயன்முறைக்காக ஏற்பட்ட கிரயம் விளைவற்றிருப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது. | நிதியேற்பாடு இல்லாமல் பகுதி 3 இன் பெறுகை நடைமுறைகளை தொடங்கிய உத்தியோகத்தர்கள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | களுகங்கை நீர்த்தேக்கத்திலிருந்து மொறகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு 8.83 கிலோமீற்றர் நீளமான சுரங்கப்பாதையை தோண்டுவதற்கான ஒப்பந்தம், 2018 - 2021 ஆம் ஆண்டில் ரூபா 7,146.91 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) ஒப்பந்த காலப்பகுதி 2022 யூலை 16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.<br><br>(ii) மீளாய்வாண்டின் இறுதியில், ஒப்பந்தத்தின் மொத்த செயலாற்றல் 82 சதவீதமாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் நிர்மாண முன்னேற்றம் 12 சதவீதமாக மாத்திரமே இருந்தது.<br><br>(iii) ஒப்பந்தத்தின் விலை வேறுபாடுகளுக்காக ரூபா 274.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் | நாட்டின் எரிபொருள் நெருக்கடி நிலைமை காரணமாக உண்மையான தொடக்க திகதி தாமதமாகியது. எரிபொருள், நிர்மாணப் பொருட்கள் மற்றும் தொழிலாளர் இயக்க சிக்கல்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் தாமதத்திற்கான முக்கிய காரணங்களாகும். மேலும் ஒப்பந்தத்தின் நீடிக்கப்பட்ட திகதி 2022 யூலை 16 ஆகும், திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் எதிர்கூறப்பட்ட கிரயம் முடிவடையும் போது ரூபா 8.25 பில்லியனாக இருக்கும். | ஒப்பந்தத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனை கம்பனி எழுத்து மூலம் ஏற்றுக்கொண்டிருந்தது. |

இறுதியளவில், ரூபா 506.98 மில்லியனை விஞ்சி ரூபா 781.48 மில்லியன் விலை வேறுபாடாக செலுத்தப்பட்டுள்ளது.

(iv) மேலும், ஒப்பந்தத்தின் விலை எதிர்காலத்தில் ஐ.அ.டொலர் 35 மில்லியன் (ரூபா. 12,600 மில்லியன்) வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

**2.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட புறம்பான நடவடிக்கை**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| 02 பிரதான நிர்மாண ஒப்பந்தங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 140 மில்லியனில் ஐ.அ.டொலர் 39 மில்லியன் மற்றும் மேலதிக ஐ.அ.டொலர் 50 மில்லியன் 2022/2023 பருவத்தில் நெல் பயிரிடுவதற்காக விவசாய உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 14,202 மில்லியன் செலவிடப்பட்டு 41,876 மெற்றிக் தொண் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 50 கிலோகிராம் பைகளில் பொதி செய்யப்பட்ட இந்த உர இருப்பு முழுவதுமாக 02 அரச உடமையாக்கப்பட்ட உரக் கம்பனிகளிற்கு வழங்கப்பட்டு 2022 திசெம்பர் 5 இல் விவசாய அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், விவசாய அமைச்சின் செயலாளரிடமிருந்து இதனை பெற்றமை தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 55.233 மில்லியன் பெறுமதியான 161.5 மெற்றிக் தொண் (3,230 மூட்டைகள்) உரப் பற்றாக்குறை காணப்பட்டது. தீர்வுக்காகவும் இந்த விடயம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 செப்தெம்பர் 23 இல் நீர்ப்பாசன அமைச்சும், மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவும் 40,000 மெற்றிக் தொண் இரசாயன உரத்தை (MOP) 1 மெற்றிக் தொண்னுக்கு ஐ.அ.டொலர் 950 விலையில் வழங்குவதற்கு கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது. அதன் பிரகாரம் உரம் கட்டளையிடப்பட்டு 2022.12.02 இல் கொழும்பு துறைமுகத்திற்கு சரக்கு வந்து சேர்ந்தது. கப்பல் முகவரான புருடென்ஷியல் ஷிப்பிங் லைன் (பிறைவேட்) லிமிட்டட் மூலம் FAs தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் ஊடாக வழங்குநர் சமர்ப்பித்த சரக்கு உண்டியலின் (bill of lading) பிரகாரம் 41,876 மெற்றிக் தொண் உரம் (MOP) வழங்கப்பட்டிருந்ததென காட்டப்பட்டது. எமது 2022 திசெம்பர் 5 ஆம் திகதிய எம்ஐ/எம்டபிள்யூஎஸ்ஐபி/பிஎம்யூ/பிஆர்ஓ/எம்ஓபி/உரம் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உர இருப்பை விவசாய அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.<br><br>அமைச்சரவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் விவசாய அமைச்சினால் விநியோக செயன்முறை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட நாளாந்த வெளியேற்ற கூற்றில் (Daily discharge statement) பெறப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட உரங்களின் அளவு 41,876 மெற்றிக் தொண் ஆகும். நாளாந்தம் வெளியேறும் | உரத் தட்டுப்பாடு குறித்து முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அளவு மற்றும் 50 கிலேகிராம் பைகளின் வெளியேற்றம்.<br><br>வழங்கப்பட்ட பைகளின் அளவு உண்மையான பைகளை விட குறைவாக இருந்தது. எனவே, விவசாய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பொதியிடல் பணியின் போது பற்றாக்குறை ஏற்பட்டது. | |

## 2.3 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2018 மே 18 இல் கடன் உடன்படிக்கை இல. 3625 ஐ.அ.டொலர் 140.47 மில்லியன் கூட்டுமொத்தத்திற்கு 2 ஒப்பந்தப் பொதிகளை நிறைவேற்றுவதற்கு கைச்சாத்திடப்பட வேண்டும். எனினும், கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2½ ஆண்டுகளுக்குப் பின்னர் 2020 திசெம்பரில் ஒப்பந்தங்கள் மாத்திரமே வழங்கப்பட்டன. இதன் விளைவாக, ரூபா 113.19 மில்லியன் கூட்டுமொத்தமான கடப்பாட்டுக் கட்டணங்கள் 2018 நவம்பர் 15 முதல் 2020 நவம்பர் 15 வரை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியிருந்தன. | பரிந்துரைக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்கேள்வி செயன்முறையின் காரணமாக UECP-ICB-1 ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. CML-MTD மோசமான நிதி நிலைமையில் இருந்தது, அதே ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட UECP-ICB-1 ஒப்பந்தத்தில் இது பாதிப்பை ஏற்படுத்தியது.<br><br>நம் நாடு 2019 இல் எதிர்கொண்ட கொவிட்-19 தொற்றுநோய், அதைத் தொடர்ந்து 2022 இல் நாட்டில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டதால் ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது, நிதிகள் குறைவாக பயன்படுத்தப்பட்டவுடன் இது குறைவான பணவளிப்பை விளைவித்தது. | குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய பணிகளுக்கு கடன் பயன்படுத்தப்பட வேண்டும். |